thiraimalar.com
# திரைமலர்
வெள்ளிக்கிழமை தோறும்
மலர்-1 இதழ்-7 .காம்
15.9.2023

பல்சுவை வார இதழ்

E-magazine



அலுவலகங்களில் பெருகும்
## கூழை கும்பிடு

இம்சையாகிப்போன இசை

# காசுக்காக விற்கப்பட்ட நிகழ்ச்சியில் கோளாறு

# ரஜினியின் இரண்டு படத்திற்கு நாயகிகள் ரெடி



ஞானவேல் இயக்கத்தில் ரஜினியின் 170வது படத்தில் ரஜினிக்கு ஜோடியாக மஞ்சு வாரியார் நடிக்க இருப்பதாக தகவல்கள் வெளிருகின்றன. அதனை அடுத்து 171வது படத்திற்கு தானாகவே வந்து தனது விண்ணப்பத்தை போட்டிருக்கிறார் ஒரு நடிகை.

வானவில் என்ற படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை அபிராமி. தொடர்ந்து பல படங்களில் நடித்து ஒரு முன்னனி நடிகையாக வந்த அபிராமி கமலுடன் இணைந்து விருமாண்டி என்ற படத்தில் நடித்தார். அதுதான் அவர் நடித்த கடைசி படமாக இருந்தது.

அதன் பிறகு திருமணம் குடும்பம் என வெளி நாட்டில் போய் செட்டிலாகிவிட்டார். நீண்ட இடைவெளிக்கு பிறகு 36 வயதினிலே என்ற படத்தில் ஒரு சின்ன கேமியோ ரோலில் நடித்தார். இடையிடையே டப்பிங்கிலும் கலக் கினார். விஸ்வரூபம் படத்திலும் டப்பிங் பேசியிருக்கிறார் அபிராமி.

இந்த நிலையில் மீண்டும் நடிக்க வந்த அபிராமி இன்னும் ரஜினியுடன் தான் நடிக்க வில்லை என்று தனது ஆசை களை கூறியிருக்கிறார். இந்த செய்தி ரஜினியின் காதுவரை சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

ரஜினியின் 171வது படத்திற்கு தனக்கு துணையாக நடிகை அபி ராமி நடிக்க அதிக வாய்ப்புள்ள தாக கூறப்படுகிறது.

கடைசியாக ரஜினி படத்தில் இணைந்த ரம்யா கிருஷ்ணனுக்கு சரியான கேரக் டர் தராததால் அவர் தரப் பில் தனது அதிருப்தியை வெளிப்படையாக ரஜினியிடம் வெளிப்படுத்தியுள்ளாராம் ரம்யா கிருஷ்ணன்.

thiraimalar.com திரைமலர்



காபி, டீக்குப் பதிலாக, சத்துக்களைத் தரும் மூலிகை சூப் பக்கம் ஆர்வம் திரும்புவது நல்ல விஷயம். அதிலும் ஸ்வீட் கார்ன், ஹாட் அண்டு சோர் போன்ற சைனீஸ் சூப்களுக்குப் பதிலாக, நம் மூலிகைகளால் தயாரான சூப் குடித்தால், அது பசியைத் தூண்டி, உடல் பலத்தைக் கூட்டிட, ஏராளமான நன்மைகளை அள்ளித்தரும். வீட்டிலேயே எளிதில் செய்யக் கூடிய சூப் வகைகளையும் அதன் பலன்களையும் பார்க்கலாம்.



## தைராய்டு பிரச்னைக்கு தூதுவளை சூப் :

தேவை: நறுக்கிய தூதுவளைக் கீரை – ஒரு கப், பெரிய வெங்காயம் – 1 பூண்டுப் பல் – 5, மிளகு, சீரகம் – தலா கால் டீஸ்பூன், பச்சை மிளகாய் – 2, தக்காளி – 3, தேங்காய்ப் பால் – அரை கப், உப்பு – தேவையான அளவு, கொத்தமல்லி – சிறிதளவு.

செய்முறை : வெங்காயம், மிளகு, சீரகம், பூண்டு, பச்சை மிளகாய், தக்காளியை மிக்சியில் போட்டு, நன்றாக அரைக்க வேண்டும். இந்த விழுதில் தேவையான தண்ணீர், உப்பு சேர்த்து, அடுப்பில் வைத்து கொதிக்க விட வேண்டும். இதில், தூதுவளை சேர்த்து இறக்க வேண்டும்.

பலன்கள் : உடலுக்கு வலிமை தரும். ஆஸ்துமா, சளி, இருமலுக்குச் சிறந்த மருந்து, மூளை நரம்புகளை வலுப்படுத்தும். தைராய்டு கட்டிகள் இருப்பவர்கள், இந்த சூப் அருந்துவதால் நல்ல பலனைப் பெறலாம். நுரையீரலை வலுப்படுத்தும்.



## நினைவுத் திறனுக்கு வல்லாரை சூப் :

தேவை: வெங்காயம் – 2, பெரியது, மிளகு – ஒரு டீஸ்பூன், சீரகம் ஒன்றரை டீஸ்பூன், பூண்டுப் பல் – 1, பச்சைமிளகாய் – 2, தக்காளி–3, வல்லாரைக் கீரை – ஒரு கட்டு (பொடியாக நறுக்கியது), கொத்தமல்லி – சிறிது, உப்பு தேவையான அளவு.

செய்முறை : வெங்காயம், மிளகு, சீரகம், பூண்டு, பச்சை மிளகாய், தக்காளியைப் பச்சையாக மிக்சியில் அரைத்துக் கொள்ள வேண்டும். இந்த விழுதில் தேவையான அளவு தண்ணீர் சேர்த்துக் கொதிக்க விட வேண்டும். ஒரு கொதி வந்ததும், நறுக்கிய வல்லாரைக் கீரையைச் சேர்க்க வேண்டும். கீரை பாதி அளவுக்கு வெந்ததும் உப்பு சேர்த்து கொத்தமல்லி தூவி இறக்க வேண்டும். கீரையை நீண்ட நேரம் வேகவைக்கக் கூடாது.

பலன்கள் : நினைவாற்றல் அதிகரிக்கும். உடலுக்குக் குளிர்ச்சி தரும். இதயத்துக்கு நல்லது. ரத்தத்தைச் சுத்திகரிக்கும். சோர்வை நீக்கும். பசியைத் தூண்டும். தாகத்தைத் தணிக்கும்.



# ரஜினி இளையராஜா ஏன் இணையவில்லை

ரஜினிகாந்தின் ஆரம்பகாலங்களில் நிறைய படங்களுக்கு இசையமைத்தவர் இளையராஜா. ஆனால் கிட்டத்தட்ட 30 வருடங்களாக ரஜினிகாந்தின் எந்த படத்துக்குமே இளையராஜா இசையமைக்கவே இல்லை. இதன் காரணமாக இரண்டு தரப்பும் வெவ்வேறு காரணத்தினை கூறுகிறது.

### ரஜினி தரப்பினர் கூறும்போது

ரஜினிகாந்தின் நடிப்பில் பி.வாசு இயக்கத்தில் உருவான படம் உழைப்பாளி. இப்படத்திற்கு இளையராஜா பாதி இசையமைத்து விட்டு வெளிநாட்டிற்கு சென்று விட்டார். மீதி இருந்த படத்தினை அவரின் மகன் கார்த்திக் ராஜா தான் இசையமைத்தாராம். இதில் படத்தின் தயாரிப்பாளருக்கும், ரஜினிக்கும் மிகப்பெரிய வருத்தம் ஏற்பட்டு இருக்கிறது.

### இளையராஜா தரப்பினரின் விளக்கம்

ஆனால், இளையராஜாவின் தம்பி கங்கை அமரன் கூறும் போது பாட்ஷா சமயத்தில் ரஜினிகாந்த் இளையராஜாவுக்கு ஏன் இவ்வளவு சம்பளம் எனக் கேட்டு இருக்கிறார். அதில் கடுப்பான ராஜா உங்க சம்பளத்த நீங்க வாங்கிட்டீங்களா? ஏன் என் சம்பளத்த கேட்டுகிறீங்க எனக் கேட்டாராம். இதில் படக்குழு அதிருப்தியாகி இருக்கிறது. அந்த சம்பவத்துக்கு பின்னர் இருவருமே இணையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முத்தம் கொடுத்து பரபரப்பாகிய நடிகை...

ஜவான் திரைப்படத்தில் அப்பா விக்ரம் ரத்தோர் ஷாருக்கானுக்கு ஜோடியாக சில காட்சிகள் மட்டுமே நடித்துச் சென்ற நடிகை தீபிகா படுகோன் சமீபத்தில் நடைபெற்ற ஜவான் சக்சஸ் மீட் நிகழ்ச்சியில் கவர்ச்சிகரமாக சேலையை உடுத்திக் கொண்டு அழகு பதுமையாக வந்திருந்தார்.

மிகப்பெரிய பாக்ஸ் ஆபிஸ் வெற்றிகளை குவித்து வரும் ஷாருக்கான் கோட் சூட் அணிந்து கெத்தாக வந்த நிலையில் அவரைக் கண்டதுமே அவரது அழகில் மயங்கி தனது அன்பை பொழியும் விதமாக கன்னத்தில் பச்சக் என ஒரு முத்தம் கொடுத்தார் தீபிகா படுகோன்.

ரன்வீர் சிங்குடன் தீபிகா திருமணமான நிலையிலும் தொடர்ந்து ஷாருக்கான் படங்களின் உச்சகட்ட கவர்ச்சியின் நடித்து வருகிறார். இந்நிலையில், ஆஃப் ஸ்கிரீனில் ஷாருக்கானுக்கு தீபிகா படுகோன் முத்தம் கொடுத்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மகனுக்காக செய்தார்... அவதிப்படுகிறார்

விஜயின் வளர்ச்சிக்கு அவரின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரன் பெரிய அளவில் துணை



பெரிய கிசு.... பெரிய கிசு.... பெரிய கிசு....

நின்று இருக்கிறார். அவரின் இயக்கத்திலேயே 7 படங்களை தொடர்ந்து இயக்கி இருக்கிறார். விநியோகிஸ்தர்கள் வாங்க வரவில்லை. ஆனாலும் தொடர்ச்சியாக விநியோகஸ்தர்களை நேரில் சந்தித்து விஜய் படங்களை போட்டுக்காட்டி எப்படியோ படத்தினை ஓட வைத்தார்.

அதே நேரத்தில், விஜயிற்கு போட்டியாக இருந்த நடிகர்களை எஸ்.ஏ.சந்திரசேகர் படம் எடுத்தே அவர்களின் கேரியரை காலி செய்தார் என்று ஒரு தரப்பினர் புலம்பி வருகின்றனர்.

நன்றாக நடித்த நடிகர்களை காலி செய்தால், விஜயால் எளிதாக கோலிவுட்டில் வளர முடியும் என்ற ஐடியாவில் தான் சந்திரசேகர் இதை செய்ததாக கோலிவுட் வட்டாரத்தில் கூறப்பட்டாலும், அதன் பலனை தற்போது எஸ்.ஏ. சந்திரசேகர் அனுபவிப்பதாகவும் கூறி வருகின்றனர்.

தற்போது அப்பா பிள்ளை உறவில் மிகப் பெரிய விரிசல் ஏற்பட்டுள்ளதால், முன் செய்த பாவத்திற்கு தற்போது மிகப் பெரிய மன உளைச்சல் ஏற்பட்டு அவதிப்படுகிறார் எஸ்.ஏ. சந்திரசேகர் என்று வெளிப்படையாக கூறிவருகின்றனர்.

## விஷாலுக்கு அடுத்த ஜோடியா...?

திருமணத்தில், காதலில் என்று ஏகப்பட்ட சர்ச்சைகளில் சிக்கியவர் விஷால். நிச்சயதார்த்தம் வரை சென்று திருமணமே நின்றுள்ள சம்பவங்களும் நடைபெற்றுள்ளது.



வரலட்சுமி, லட்சுமி மேனன் என வரிசையாக பல சர்ச்சைகளில் சிக்கினாலும் அதை பற்றி பெரிதாக காட்டிக் கொள்ளாதவர் விஷால்.

இதனால் நடிகைகள் குறித்து யாராவது கேள்வி கேட்டால், தேவையில்லாத வதந்திகளை பரப்பி அந்த நடிகைகளை கஷ்டப்படுத்த வேண்டாம் என தன் அன்பான வேண்டுகோளை விடுப்பார்..

ஆனால் விஷால் உண்மையிலேயே சமீபகாலமாக என்னுடைய கிரஷாக ராஷ்மிகா மந்தனாவைத்தான் பார்க்கிறேன் என வெளிப்படையாக கூறினார். அவருடைய துரு துரு பேச்சு, சுறுசுறுப்பு, பக்கத்துவீட்டு பெண் போன்ற தோற்றம் என அவரை மிகவும் பிடிக்கும் என விஷால் கூறினார்.

## தன் மகளுக்கு ஒரு நியாயம், கணவன் மகளுக்கு ஒரு நியாயமா?....

மிகப் பெரிய நடிகையாக வலம் வந்த ராதிகா ஒரு கட்டத்தில் சீரியல்களில் கவனம் செலுத்தி வந்தார். இவர் ஏற்கனவே இரண்டு முறை விவகாரத்து ஆன நிலையில் 2001ல் நடிகர் சரத் குமாரை திருமணம் செய்துகொண்டார். முதல் திருமணத்தில் இவருக்கு ரேயான் என்ற மகள் இருக்கிறார்.

மகள் ரேயனுக்கு நடிக்க ஆசைவந்த போது அதற்கு அனைபோட்டார் ராதிகா.

தான் பெரிய நடிகையாக வலம் வந்த போதிலும் ரேயானை நடிப்புக்குள் இறக்கவே ராதிகா விரும்பவில்லையாம். ஆனால் அவரின் கணவர் சரத்குமாரின் மகளும் நடிகையுமான வரலட்சுமி நடிக்க ஆசைப்பட்டு இருக்கிறார். இதை தனது தந்தை சரத்குமாரிடம் சொன்னபோது முடியவே முடியாது எனக் கூறிவிட்டார்.

ஆனால் வரலட்சுமியை அவரின் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கே கூட்டிச்சென்ற ராதிகா ஏன் நடிக்க கூடாது என சண்டையிட்டு இருக்கிறார். இதனால் சரத்குமாருக்கே என்ன சொல்வது என்றே தெரியவில்லையாம். ஒரு கட்டத்தில் சரி என ஒப்புக்கொண்ட பிறகே போடா போடி படத்தில் எண்ட்ரி கொடுத்து இருக்கிறார்.

தொடர்ச்சியாக பெரிய பட வாய்ப்பு கிடைக்க வில்லை என்றாலும் வரலட்சுமி கோலிவுட்டில் தனக்கான இடத்தினை பிடித்துவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும். தற்போது தமிழ், மலையாளம், கன்னடா, தெலுங்கு என ஒரே நேரத்தில் பல படங்களில் பிஸியாக நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்லிம் ஆகணுமா?

❖ தினசரி ஒரு கைப்பிடியளவுக்கு பாதாம் பருப்பு, வேர்க்கடலை போன்ற கொட்டை வகைகளை சாப்பிடுங்கள். இதை சாப்பிட்டால் இருதய நோய் அபாயம் வெகுவாக குறையும். ஆயுளில் மூன்றாண்டுகளை அதிகரிகஒகும் என்கிறார்கள் அமெரிக்க ஆராய்ச்சி யாளர்கள். இருதயத்துக்கு ஆரோக்கியம் அளிக்கும் நல்ல கொழுப்பு, ஒட்டுமொத்த நலத்தைக் காக்கும் `செலினியம்' ஆகியவை கொட்டை வகை உணவுகளின் சொத்து.

❖ உங்கள் உணவில் வாரத் தில் இருமுறை மீன் இருக்கட்டும். இரண்டில்ஒன்று எண்ணை வகை மீனாக இருந்தால் நல்லது. கொலஸ்ட் ராலை குறைத்து, இருதய நோய் அபாயத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய `ஒமேகா 3 பேட்டி ஆசிட்', எண்ணை செறிந்த மீன்களில் அதிகம் உள்ளது.

❖ சாப்பாடுகளுக்கு இடையே 3 மணி நேர இடை வெளி அவசியம். மூன்று பிரதான உணவுகளில் காலை உணவை முழுமையாக சாப்பிடுங்கள்.

❖ தினசரி நான்கு `கப்' காபி பருகலாம். ஆரோக்கியம் காக்கிறேன பேர்வழி எனறு காபியையே துறக்க வேண்டாம். அளவாக காபி பருகுவது, சர்க்கரை நோய், உணவுக் குழாய் கேன்சர், ஈரல் நோய்களைத் தடுக்கும் என்பது ஆய்வாளர்கள் கருத்து.

❖ தினந்தோறும் 5 வகை பழங்கள், காய்கறிகள் சாப்படுவது ஆரோக்கிய ஆரோக்கியவாழ்வுக்குவுக்கு அடித்தளமிடும். பழங்கள், காய்கறிகளில் உள்ள `ஆண்டிஆக்ஸிடன்ட்கள்' கேன்சர், இருதய நோய்கள் போன்ற மோசமான நோய்களைத் தடுக்கும்; நோய்த்தொற்றுக்கு எதிராக இருக்கும். மூன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் காய்கறி, பழங்கள் எடுத்துக் கொள்ளலாம். காய்கறிகள் அதிகமான நார்ச்சத்தையும், குறைவான சர்க்கரைச் சத்தையும் கொண்டுள்ளன.



❖ வயதுக்கு வந்தவர்கள் தினமும் 6 கிராமுக்கு மேல் உப்பு சேர்க்கவேண்டாம். சமையல் செய்யும் போதுமட்டும் உப்பை சேர்க்கவேண்டும். பிரெட், `பேக்கிங் உணவு' வகைகளில் அதிக உப்பு மறைந்திருக்கிறது என்பதை உணருங்கள்.

❖ மொத்தம் 7 வகையான நிறங்களைக் கொண்ட காய்கறிகள், பழங்கள் இருக் கின்றன. ஒவ் வொரு வண்ண காய்கறி, பழங் களும் வெவ்வேறு வகையான `ஆண்டி ஆக்ஸிடன்ட்களை' கொண்டிருக்கின்றன. எனவே எல்லா வண்ண காய்கறி, பழங்களும் உணவில்இருக்கட்டும்.

❖தினமும் 8 கப் திரவம் குடிப்பது அவசியம். ஆனால் அது எல்லாம் தண்ணீராக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. டீ, காபியும் இதில் இடம்பெறலாம்.

❖ சராசரியாக பெண்கள் 9 வகை மாவுச்சத்து உணவுகளை (ஆண்களுக்கு 11 வகை) சாப்பிட வேண்டும். ஒரு துண்டு ரொட்டி, முட்டை அளவு உருளைக்கிழங்கு, 28 கிராம் சாதம் போன்றவை இதில் அடங்கியிருக்கலாம்.

❖ சாதாரணமாக குளிர்பானங்களில் 10 சதவீத சர்க்கரை உள்ளது. அதாவது ஒரு புட்டியில் 150 கலோரி இருக்கிறது. தொடர்ந்து குளிர்பானம் பருகுவது தொப்பைக்கு ஒரு முக்கியக் காரணம். `டயட்' குளிர்பானங்களுக்கு மாறலாம்; ஜூஸுடன் அதிக தண்ணீர் சேர்த்துப் பருகலாம்.

thiraimalar.com திரைமலர்

கதை, கவிதை, நேர்காணல், துணுக்கு செய்திகள், ஜோக், சினித்துறை செய்திகள் அனைத்தையும் வரவேற்கிறோம்.

## நமது இதழில் உங்கள் படைப்பு வெளிவரவேண்டுமா?

சாதனையாளர், தொழில்முனைவோர், கல்வியாளர், கலைத்துறையினர், சமூக சேவையாளர், சிந்தனையாளர், கவிஞர் என அனைத்து துறையினரின் சாதனைகளையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்த எங்களை தொடர்பு கொள்ளவும்.

**+ 9 1 9 4 4 4 2 6 4 6 1 0**

# காதலின் தீபம் ஒன்று

யார் வீட்டு டிவியிலோ சத்தமாக வைத்திருந்த, “தம்பிக்கு எந்த ஊரு “ரஜினி பட பாடல் ராகவன் காதில் விழுந்தது.

நினைவுகள் பதினைந்து வருடம் பின் நோக்கி சென்றது.

ராகவன் நண்பர்கள் நாற்பது பேர் ஒரே நேரத்தில் மொத்தமாக அந்த மத்திய அரசு நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தனர்.

நேர்மையான அய் ஏ எஸ் அதிகாரி முயற்சி.

அதை தனக்கு வேண்டிய பத்து, பதினைந்து ஆட்களுக்கு மட்டும் தலைவர் ஊரில் இல்லாத சமயம், இட்டு நிரப்ப முயற்சி செய்த செயலர் செயல்,ஒரு கருப்பு ஆடு மூலம் தலைவர் காதுக்கு போக, நேர்மை கோபப்பட்டு, நேர் முக தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் ஒரே நேர உத்தரவு பறந்தது.

புயலெனே நுழைந்த புதிய பட்டதாரி கூட்டம், நிர்வாக அலுவலக அணைத்து துறைகளுக்கும் உயிர் கொடுத்தனர். திறமை இருந்ததால் பயம், காக்காய் பிடிப்பு, ஜால்ரா சத்தம் இல்லை.

எதிர்பாராத சம்பளம், தனி ரூம் வாசம், வாரம் ஒருமுறை, அல்லது இரண்டு வாரம் ஒருமுறை ஊருக்கு, வீட்டுக்கு சந்தோஷ விஜயம்.

பழைய நரிகள், காதில் புகை வர, ரத்தம் ருசி பார்க்க காத்து இருந்தனர்.

அதற்குத்தோதாய் அமைந்தது அரவிந்த், ஸ்டெல்லா காதல் திருமணம்.

பக்கத்து மாவட்ட பிரபல நிறுவன அதிபர் பெண் ஸ்டெல்லா.

அய்யர்வீட்டு பையன் அரவிந்த். நரிகள் மூளை தீவிரமாக



thiraimalar.com திரைமலர்



வேலை செய்தது.

அந்த பெரிய ஹோட்டலில் ராகவன் ஏற்பாடு செய்து இருந்த விருந்தில், போலீஸ் பெண் போலீஸ் துணையுடன் அனைவரையும் வேனில் ஏற்றி, ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள காவல் நிலையத்திற்கு விசாரணை என்ற பெயரில் மிரட்டல்.

பலருக்கு பசி. பெண்களுக்கு இயற்கை உபாதை.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை, மாமா, சித்தப்பா என்று பலர் ஸ்டெஷன் வாசலில் இவர்களை எதிர்பார்த்து.

ஸ்டெல்லா அப்பா அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி, போலீஸ் விஜாரணையை சிக்கல் ஆகினார்.

“இன்னொரு, “அலைகள் ஓய்வதில்லையா?” அவ வேலைக்கு போக வேண்டிய அவசியமே இல்லை எஸ் அய் சார். நல்லா விசாரிங்க “

எப்போதடா நாள் முடியும் ரூமுக்கு திரும்புவோம்,” கவுரி சங்கர்”ஹோட்டல் டிபன் முடிந்து இருக்க கூடாது கடவுளே என்று புலம்ப ஆரம்பித்தது பலர் மனம்.

“யார் சொல்றிங்க. உங்களுக்கு தெரியாமல் இது நடந்து இருக்காது. நான் பொறுமையா இருக்கேன். என் பொறுமை எல்லை கடந்தால், என்ன ஆகும்னு எனக்கே தெரியாது. நீங்க இப்போ ரெண்டு வருஷம் ப்ரபேஷன் பீரியட் தான். போலீஸ் பிரச்சனை என்றால் உங்கள் வேலை, எதிர்காலம் பாதிக்கப் படும். என்னை நண்பனா நினைச்சு பயப்படாம சொல்லுங்க “கைத்தடி மேஜை மேல் வைக்கப்பட்டது. சிரிப்பு முகத்தில்.

“நான் சொல்றேன் சார் “ராகவன் முன் வந்தான்.

“சொல்லு “

“முதல்ல எங்க எல்லாருக்கும் ஒரு கால் மணி நேர ரெஸ்ட் கொடுங்க. ஒரு டீ, ரெண்டு பிஸ்கட், அல்லது சமோசா சொல்லுங்க. பாவம் இது நாங்க சாப்பிட்டு தூங்கற நேரம் “

“போலீஸ் கிட்டயே லஞ்சமா? “

“சார் இது லஞ்சம் இல்ல. வள்ளுவர் சொன்ன விருந்தோம்பல். நீங்க தானே நண்பனா நினைச்சு உண்மைய சொல்ல சொன்னீங்க “ராகவன் உயரம், நிறம் அவனை நம்ப வைத்தது.

“என்னடா சொல்லி தொலைக்க போறே “ஜோசப் பதறினான்.



நா. நாகராஜன், ஊரப்பாக்கம்,
போன்:8778935252

“சமோசா சூப்பர் இல்லே. இரவு கத கதப்புக்கு டீ கூட ஒரு தம் இருந்தால் இன்னும் நல்லா இருக்கும் “ராகவன் ஜோசப் காதோடு சொன்னான்.

கால் மணி நேரம் கடந்தது.

“சொல்லுங்க அவங்க காதலிச்சது உனக்கு தெரியுமா?” இன்ஸ்பெக்டர் கோபத்தை அடக்கி கொண்டு கேட்டார்.

“ம் “ராகவன் தலை ஆட்டினான்.

“எப்படி? “

“ஏன்னா ஸ்டெல்லா வை நானும் ஒருத்தலையாக காதலிச்சேன். “

பொய் என்றாலும் வெளியில் வர எழுத்தாளன் மனதில் தோன்றிய குட்டி கதை.



வெளியில் வந்து சிகரெட் பற்ற வைக்கும் போது கீர்த்தனா கேட்டாள்.

“எப்படி ராகவா, திறமையா பொய் சொன்னே?”

“உன்னை உண்மையா காதலிக்கறதுனால”

அவன் பேச்சை மறுக்கும் மன நிலையில் அவள் இல்லை.

இன்னொரு காதல் தீபம் கண்களால் ஏற்றப்பட்டது.

(முற்றும்)

Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

தாம்பரம் பஸ் நிலையத்தில் ரகு:
"ராஜன் வண்டலூர் வழியா மூணு பஸ் நிக்குதே, எது முன்னால போகும்? "

ராஜன் :"எல்லா பஸும் முன்னால தான் போகும் "




பெட்டிகடையில் ரகு: "செவ்வாழை பழம் ஒண்ணு எவ்வளவு? "

கடைகாரர்: "பதினெட்டு ரூபாய் "

ரகு: "பத்தா வாங்கினா?"

கடைகாரர்:"அதே பதினெட்டு தான் "

ரகு: "சரி இந்தா பதினெட்டு ரூபாய். நல்லதா பத்து பழம் வேகமாக எடு? "

...

ரகு: "செவ்வாழை பழத்தை சாப்பிட்டா மூளை வளருமா? தெம்பு வருமா? "
கவிதா: "கடைக்காரருக்கு வருமானம் வளரும் "



கண்டக்டர்: "தம்பி எங்க போணம். டிக்கட் யாரு எடுக்கறாங்க? "

சுந்தர்: "எங்க அக்கா ஊருக்கு. பின்னாடி கண்ணாடி போட்ட என் அப்பா எடுக்கறாரு "

கண்டக்டர்: "தம்பி, எல்லாரும் முன்னாடி தானே கண்ணாடி போட்டு இருக்காங்க "

.. .. .. ..

நடிகை:
"இந்த டிரஸ் போதுமா? "
இயக்குனர்:
"மேடம் நீங்க குளிக்கிற சீன். நீச்சல் குளத்தில்.
இந்த டிரஸ் கூட அதிகம் "


நாகேஷ்ராஜன், சென்னை 603 211.
கைபேசி :8778935252.

# சமையலை மிக அழகாக சொல்லித்தரும்



## கீதாசமையல் YouTube சேனல்

**சமையலில் புதியவரா நீங்கள்?**
**பேச்சிலர் லைப்பில் தனியாக சமைத்து சாப்பிடுபவரா?**
**புதிய வெரைட்டி சமையலை விரும்புபவரா?**
**ஆனால் சமைக்க தெரியவில்லை என்று வருத்தப்படுகிறீர்களா?**

சமையல் என்பது மிகப்பெரிய கலை, ஒவ்வொரு உணவிலும் ஒவ்வொரு சமையல் பொருட்களை சேர்த்து சமைக்கும்போது விதவிதமான உணவுகள் கிடைக்கும், எந்த உணவில் எந்த பொருளை சேர்த்தால் என்ன சுவையில் உணவை தயாரிக்கலாம்என்பதை நன்கு அறிந்தவர்கள் கற்றுத் தேர்ந்த சமையல்கலை நிபுணர்களாவார்.




தற்போதைய காலத்தில் ஓட்டல் உணவை விரும்பி சாப்பிடும் கலாச்சாரத்தின் உச்சத்தை பலர் கண்டுள்ளனர், சுவைக்காக சேர்க்கப்படும்பல்வேறுகலவைகளால், அந்த உணவேஒரு கட்டத்தில் விஷமாக மாறுவதையும் நன்கு அறிந்தவர்கள் தற்போது சுயமாக கஞ்சி வைத்தாவது குடித்து பசி ஆறினால் போதும் என்ற மனநிலைக்கு வந்து சுயமாக சமைக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுபோன்ற நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய காத்திருக்கிறது **கீதா சமையல் யூ–டியூப் சேனல்,** இந்த சேனலில் புதிய புதிய சமையலை மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பொறுமையாகவும் விளக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான சமையல் குறிப்புகளையும், அவற்றை செய்யும் வழிமுறைகளையும் தெளிவான வீடியோமூலம் தெரிந்து கொண்டு சமைக்கலாம்.

நான்வெஜ், வெஜ், மூலிகை, ஸ்வீட், காரம் என பல்வேறு உணவுகளின் ரெசிபிக்கள் கொடுக்கப் பட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய்யில் பிரியாணி, நாட்டுக் கோழி பிரியாணி, இரால் பிரியாணி, மீல்மேக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி போன்ற அசைவ பிரியாணிகளும், மழைகாலங்கள், பனிக்காலத்திற்கு ஏற்படும் உடல் பிரச்சனைகளை தீர்க்கும் நாட்டுக்கோழி ரசம் போன்ற உணவுகளின் சமையல்முறைகளை தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சைவ உணவில் மூலிகை ரசம், புடலங்காய் உருண்டை, சில்லி கத்தரிக்காய், கொள்ளு பிரியாணி போன்ற சூப்பர் உணவுகளை சுவையாக தயாரிக்கும் முறையை மிக அழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்த சேனலை பார்த்து நீங்களும் பயன் பெறலாம், தெரியாத உணவை தெரிந்து கொள்ளுங்கள்.

# மன அழுத்தம் போக்கும் சுகந்த மனம்

இன்றைய காலக்கட்டத்தில் மனிதர்கள் அருளைவிட, பொருளை வேண்டி ஓடி... ஓடி உழைக்கின்றனர். இவ்வாறு அலைந்து திரிவதால் ஒருசிலருக்கு மனஅழுத்தம் கூட ஏற்படுகிறது. இதன் காரணமாக வீட்டில் எப்போதும் சிடு சிடு என்று மனைவி, குழந்தைகளிடம் எரிந்து விழும் சுபாவம் அதிகரிக்கிறது.

இவ்வாறான சுபாவத்தை அப்படியே வளர விட்டால் கடைசியில் மனநோய் எனும் மிகப்பெரிய பிரச்சனைகளுக்கு ஆளாக நேரிடும்.

இதை தவிர்க்க, வீடுகளில் சுகந்த வாசம் தரும் ஊதுபத்தி, சாம்பிராணி வத்தி போன்றவற்றுடன், நல்லெண்ணை அல்லது சுத்தமான பசுநெய்தீபம் ஏற்றிவைத்து, ஒருசில நிமிடங்கள் கண்மூடி தியானம் அல்லது யோகா போன்றவற்றை செய்தால், மனம் புத்துணர்ச்சி பெறுவதுடன், ஒருவித தெளிவும், சுறுசுறுப்பும் கிடைக்கும்.

மன அழுத்த சிகிச்சை அளிக்கு ஒருசில மையங்களில் மேற்கண்ட வழிமுறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

“கோவிலுக்கு சென்றுவந்தால் மன பாரம் தீர்ந்து அமைதி கிடைக்கிறது, அத னால் தினமும் கோவிலுக்கு சென்று வருகி றேன்” என்று ஒரு சிலர் கூறுவதைகேட்டிருப்போம், இதற்கு காரணம், கோவில்களில் ஏற்றப் படும் நெய் மற்றும் நல்லெண்ணை விளக்குடன் சுகந்த மனம் வீசும் ஊதுபத்திகளின் செயல்தான் காரண மாகிறது. மன அழுத்தம் இருக்கும் போது சுகந்த மனம் வீசும் ஊதுபத்தியை ஏற்றிவைத்தால் மனம் அமைதி படும்.


பல்சுவைச் செய்திகளை தரும் திரைமலர்.காம் இணையதளத்தில்

நிருபராக விரும்புகிறீர்களா?

ஆர்வம் மட்டுமே போதும்
பணி அனுபவம் தேவையில்லை,
தொடர்பு கொள்ளவும்.

9444264610

# உடலின் நோய் எதிர்பாற்றலை அதிகரித்து கிருமிகளை அழிக்கும் வேப்பம் பூ ரசம்

ஒரு பாத்திரத்தில் சிறிது நெய் விட்டு உருகியதும் சிறிது பெருங்காயப்பொடி, கடுகு, வரமிளகாய், சிறிது வேப்பம் பூ காய்ந்தது இவை அனைத்தையும் சேர்த்து வதக்கி பின் புளிக்கரைசல் மஞ்சள் பொடி, உப்பு சேர்த்து நீர் விட்டு மிளகு, சீரகம், பூண்டு தட்டிப்போட்டு லேசாக ஒரு கொதி வந்தவுடன் கறிவேப்பிலை கொத்தமல்லி தூவி இறக்கி விட வேண்டும். இந்த வேப்பம் பூ ரசம் அருந்தினால் வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியேற்றும்.

உயர் ரத்த அழுத்தத்தை குறைத்து சமன் செய்யும். பித்தத்தை சமன் செய்யக்கூடியது. ஈரலை பலப்படுத்த கூடியது.

பசியை தூண்டக்கூடியது. செரி மான கோளாறுகளை போக்க கூடிய தாக அமைகின்றது.

ரத்தத்தில் உள்ள அதிக கொழுப் பை குறைக்க கூடியது. மாரடைப்பை தடுக்க கூடியது. மாதம் ஒரு முறையாவது வேப்பம் பூ ரசம் சாப்பிட வேண்டும். வேப்பம் பூ துவையல் செய்து சாப்பிடலாம்.

வேப்பம் பூ ஒரு டீ ஸ்பூன், கருஞ்சீரகம் கால் டீஸ்பூன், மஞ்சள் கால் டீஸ்பூன் இவற்றை ஒரு டம்ளர் நீர்விட்டு கசாயமாக்கி தினசரி 50ml அளவுக்கு குடித்து வர கை, கால் எரிச்சல் தீரும்.

நரம்புகளில் ஏற்படும் அலர்ஜி, தேய்வு சரி யாகும். அதோடு உள் உறுப்புகளும் பாதுகாக் கப்படும். வேம்பு ஒரு முத்தோஷ சமனி.





# காகம்

ஒரு வீட்டில் ஜன்னல் அருகே தந்தையும் மகனும் அமர்ந்திருந்தனர்.

சற்றுத் தொலைவில் ஒரு காகம் வந்தமர்ந்தது.

‘அது என்ன மகனே?’ என்று கேட்டார் தந்தை.

‘அப்பா, அது காகம்’ என்றான் மகன்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மீண்டும் தந்தை ‘அது என்ன?’ என்றார்.

‘அது காகம்’ என்றான் மகன்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மீண்டும் தந்தை ‘அது என்ன?’ என்றார்.

மகனுக்கு கொஞ்சம் எரிச்சல். ‘காகம்!’ என்றான்.

நான்காவது முறையாக மீண்டும் தந்தை மகனிடம் `அது என்ன மகனே?’ என்று கேட்டார்.

மகனின் கோபம் எல்லை கடந்தது. ‘காகம் காகம் காகம்

வயசாச்சுன்னா சும்மா இருக்க வேண்டியது தானே’ என்று கோபத்தில் எரிந்து விழுந்தான்.

தந்தையின் கண்கள் பனித்தன. எதுவும் பேசவில்லை.

மெதுவாக எழுந்து உள்ளே போனார்.

ஒரு பழைய டைரியை எடுத்து வந்தார்.

அதில் ஒரு பக்கத்தைப் புரட்டி மகனிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார்.

‘இன்று என் செல்ல மகன் என்னிடம் ஜன்னலில் வந்தமர்ந்த ஒரு பறவையைக் காட்டி அது என்ன? என்று கேட்டான்.

காகம் என்று புன்னகையுடன் சொன்னேன்.

அவனுக்குப் புரியவில்லை போல!

மீண்டும் மீண்டுமாய் இருபத்து மூன்று முறை என்னிடம் அது என்ன என்று கேட்டுக் கொண்டே இருந்தான்.

நான் ஒவ்வொரு முறையும் அவனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்துக் கொண்டே அது காகம் என்று சொன்னேன்.

இன்று நான் ரொம்ப மகிழ்ச்சியாக உணர்ந்தேன்’ என்று எழுதியிருந்தது.

மகனின் கண்களில் கண்ணீர் வடிந்தது.

இருபத்து மூன்று முறை தன் கேள்விக்கு அன்புடன் பதில் சொன்ன தந்தையையா

நான்காவது முறை கோபத்தில் திட்டினேன் என மனம் வருந்தி தந்தையின் கரம் பிடித்தான்.

அப்பா...



## இம்சையாகிப்போன இசை

# காசுக்காக விற்கப்பட்ட இசையின் கோளாறு




பிரபலமானவர்கள் தாங்கள் செய்யும் தொழிலை கடவுளுக்கு சமமாகவும், தங்கள் தொழிலை சமூக சேவை என்றும் கூறிக் கொள்ளும் வழக்கம் தற்போது பெருகிவருகிறது. அந்த வகையில் இசையை சேவை என்று கூறிக் கொண்டு அதை விற்கும் இசையமைப்பாளர்கள் மத்தியில் ஏ.ஆர். ரகுமான் விதிவிலக்கல்ல.

இசையமைத்த பாடலுக்கு இன்றுவரை ராயல்டி வேண்டும் என்று போராடி, தங்கள் இசையை அசையா சொத்தாக மாற்றியவர்கள் எப்படி இசையை சேவை என்று கூறிக்கொள்கின்றனர் என்பது புரியாத புதிர்.

இசையின் மூலம் சமூகத்தில் பெயரும், புகழும் சேர்ந்ததும், அதற்கேற்றவகையில்நடந்து கொள்ளாமல் தங்கள் சுயநலத்துக்காக பொது சேவை என்ற பெயரை பயன்படுத்துவது வேதனை தான்.

அந்தவகையில் மக்களுக்கு இசை சேவை வழங்க ஏ.ஆர்.ரகுமானால் நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சி மிகப் பெரிய அளவில் இசைப் பிரியர்களிடையே ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அது ஏற்படுத்தி கொடுத்த தாக்கத்தைவிட, அதற்கு ஏ.ஆர்.ரகுமானால் கூறப்பட்ட வார்த்தை மக்களை இன்னும் முட்டாளாக்கியுள்ளது.

ஒரு நிகழ்ச்சியை நடத்தும் போது அந்த நிகழ்ச்சி குறித்த செயல்பாட்டை அலசி ஆராய்ந்த பின்பே நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க வேண்டும்.

குடும்பத்தில் ஒரு திருமணம் நடைபெறும்போது, திருமணத்திற்கு எத்தனை பேருக்கு பத்திரிகை வைக்கவேண்டும், எத்தனை பேர் வருவார்கள், எத்தனை பேருக்கு சாப்பாடு தயாரிக்க வேண்டும், வருபவர்களுக்கு ஏற்ப திருமணக்கூடத்தில் இட வசதி இருக்குமா என்று A to Z அலசி ஆராய்வது



வழக்கம்.

ஒரு 200 பேர் கலந்து கொள்ளும் திருமணத் திற்கே இவ்வளவு விஷயங்களை அலசி ஆராயும் போது,

ஒரு மாபெரும் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்புமிக்க நிகழ்ச்சியை நடத்தும் போது எவ்வளவு யோசித்திருக்கவேண் டும். என்னென்ன முன்னேற்பாடுகளை செய் திருக்க வேண்டும்.

டிக்கெட்டை மட்டும் விற்பனை செய்வதில் குறிக்கோளாக இருந்தவர்களுக்கு மற்ற விஷயங் கள் தெரியாமல் போனதிலிருந்து அவர்களின் நோக்கம், "காசு... பணம்... துட்டு... மணி... மணி... மட்டுமே என்பது தெள்ளத் தெளிவாகிறது.

இதைவிட கொடுமை இந்த சம்பவத்திற்கு "நானே பலியாடு" என்று உருக்கமான பேட்டி, வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போன்று உள்ளது.

தமிழகத்தில் சரியான கட்டமைப்பு இல்லை என்ற ஏ.ஆர்.ரகுமானின் கூப்பாடு அவரை ஜோக்க ராகவே ஆக்கியுள்ளது.

இவ்வளவு கூட்டம் வரும்... இவ்வளவு வாக னங்கள் வரும்... இவ்வளவு ரசிகர்களின் ஆர்ப் பாட்டத்தை எதிர் கொள்ள வேண்டும் என்ற விஷயங்கள் முன்பே ஏ.ஆர்.ரகுமானுக்கு தெரிய வில்லையா?

கட்டமைப்பு இல்லை... என்று கூப்பாடு போடு பவருக்கு, கட்டமைப்பு இல்லை என்று தெரிந்தும் இவ்வளவு பெரிய நிகழ்வை நடத்த வேண்டியதின் அவசியம் என்ன?

இருக்கையை விட மூன்று மடங்கு டிக்கெட் விற்பனை செய்தது எதற்காக?

இன்னும் அரசு சரியான நடவடிக்கை எடுக்க வில்லை ஏன்?

பல ஆயிரம் பணம் கொடுத்து டிக்கெட் எடுத்த வர்கள் நிகழ்ச்சியை பார்க்காத போது அவர்களிடம் பெறப்பட்ட தொகை திரும்ப கிடைக்குமா?

எந்த கேள்விக்கும் பதில் சொல்வாரில்லை...

ஆனாலும் திரைத்துறையில் தற்போது ஒவ்வொரு பிரபலங்களாக தலையை வெளியே காட்டி ஏ.ஆர். ரகுமானுக்கு தோள் கொடுத்துவருவது தொழில் ரீதியான ஆதரவு என்றாலும், ஏ.ஆர்.ரகுமானுக்கு அட்வைஸ் செய்யாமல் அவரின் தவறை நியாயப்படுத்துவது மன்னிக்க முடியாத, ஏற்க முடியாத வருத்தமே.

சமுதாயத்தில் வசதிபடைத்தவர்கள், அதிகாரம் படைத்தவர்களுக்கு ஒரு நியாயம், சாமானியனுக்கு ஒரு நியாயம் என்று சட்டத்தை இரண்டாக பிரித்து, அனைவருக்கும் சரிசமமான சட்டம் நடைமுறையில் இல்லை என்பதை இந்த நிகழ்வு வெட்ட வெளிச்சமாக காட்டியுள்ளது வருந்தந் தக்க ஒன்றாகும்.

## பொதுமக்கள் வெளிப்படையாக பல கேள்விகளை முன்வைத்து வருகின்றனர்

- 46,000 பார்வையாளர்கள் கூடுவதற்கு 5 மணி நேரத்திற்கும் மேல் செலவிடப்படும் இடத்தில்

எவ்வளவு toilet வசதிகளை உருவாக்கப்பட்டது என்றால், ஒரு டாய்லெட் கூட இல்லை என்றே பதில் வருகிறது.

- சுமார் 7000 வாகனங்களுக்கு டோக்கன் போட்டு காசு வசூல் செய்யத் திட்டமிட்டவர்களுக்கு, அவ்வளவு வாகனங்கள் பார்க் செய்ய Parking space இல்லை என்பதை ஏன் மறைத்தனர்.
- வாகனங்கள் வந்து செல்ல IN & EXIT வழித் தடங்கள் இல்லை. ரோடே இல்லாத 12 அடி கூட இல்லாத ஒரு வழியைக் கடந்து OMR சாலையில் இணைத்தனர். வருவதற்கும் இதே ரகம் தான். இதனால் தான் மொத்தமாக 6 மணி நேரம் அந்த பகுதியே வாகன நெரிசல் ஏற்பட்டது.
- முதல் உதவி மருத்துவக் குழு ஏற்பாடு இல்லை? ஆம்பிலன்ஸ் சேவைகள் எதுவும் இல்லை. அரசின் தீயணைப்பு துறை காவலர்கள் இல்லை. மக்களுக்கு போதிய குடிநீர் வசதி இல்லை! அரசின் அடிபப்டை வழிகாட்டுதல்கள். அதுவும் செய்யவில்லை!
- நிகழ்ச்சி நடத்த மக்களை ஒருங்கிணைக்க போதுமான வேலை ஆட்கள் இல்லை. ஒரு



கட்டத்தில் யாரையுமே காண வில்லை. 6 மணிக்குப் பின் டிக்கெட் பரிசோதனைக்குக் கூட ஆள் இல்லை.

- ஒருகிணைப்பாளர்கள் மக்களை ஒருமையில் அசிங்கமாக திட்டி அடிக்க பாய்ந்துள்ளனர்.
- பெண்கள், சிறுமிகள் மானபங்கம் செய்யப்பட் டுள்ளனர் நெரிசலில். குழந்தைகள் வைத்திருந்த பெற்றோர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையிலி ருந்து தப்பிக்கப் போராடியுள்ளனர். பலருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. வாகனங்கள் பல சேதம் ஏற்பட்டுள்ளது. எதற்குப் பதில் இல்லை?
- இவ்வளவு கொடூரமாக நடந்த நிகழ்ச்சிக்கு முறையான அனுமதி வாங்கி இருந்தார்களா! ஆம் ஆனால் 25,000 வருவார்கள் என்று அனுமதி. ஆனால் ஆதித்யா ராம் பேலஸ் என்ற அந்த பகுதியில் 7500 பேர் வசதியாக அமர்ந்து பார்க்க மட்டுமே முடியும். அதற்கு எப்படி 25,000 அனுமதி கொடுத்தனர்.
- சரி 25,000 பேர் அனுமதி கொடுத்த இடத்திற்கு எப்படி 46,000 பேர் வந்தனர்? 36,000 பேருக்கு டிக்கெட் விற்கப்பட்டதாக அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள் அது எப்படி?

## மர்மமான கேள்வி

**YMCA, தீவுத்திடல், நேரு உள்விளையாட்டு அரங்கம் போன்றவை 40,000 மக்கள் கூடவும் முடியும். அங்கே போதிய வசதிகளும் உண்டு, மக்கள் வந்து போவதும் எளிது.. ஆனால் அந்த பகுதிகளைத் தேர்வு செய்யாது சென்னை வெளியே 20கிமீ தூரத்தில் பனையூரில் வாகனம் வந்து செல்ல முடியாத பகுதியில் போதிய மக்களை ஒன்றிணைக்க வசதியில்லாத பகுதியைத் தேர்வு செய்யக் காரணம் என்ன?**

இது முதல் முறை அல்ல முன்பு கோவையில் நடந்த நிகழ்ச்சியும் இதே லட்சணத்தில் தான் நடந்தது. ஏற்கனவே முன் அனுபவம் இருந்தும் இந்த நிகழ்ச்சியிலும் தோல்வி அடைந்திருப்பதால், இதுபோன்ற நிகழ்ச்சிக்கு இவர்கள் லாயக்கல்ல என்பதையே காட்டுகிறது.



ஏ.ஆர்.ரகுமானுக்கு ஆதரவாக "அன்பை நேசியுங்கள் வெறுப்பு வேண்டாம்" என்று ஒருசில நடிகர்கள் போதனை கூறுகின்றனர். குற்றம் செய்தவர்களுக்கு அறிவுரை கூறாதவர்கள், தொடர்பு இல்லாத மக்களுக்கு இலவச அறிவுரை கூறுகின்றனர்.

thiraimalar.com திரைமலர்

# சத்தான குளிர்பானங்கள்

கோடை காலத்தை முன்னிட்டு உங்களுக்காக முன்னதாகவே சில சிறப்பான குளுமையான பானங்கள் இயற்கை முறையில் தயாரிக்கும் செய்முறை.

## நன்னாரி Pinacolda

**தேவையான பொருட்கள்**



- ❖ பைன் ஆப்பிள் ஜூஸ்150மில்லி
- ❖ தேங்காய் பால் 50 மில்லி
- ❖ சர்க்கரை 1 டேபிள் ஸ்பூன்
- ❖ நன்னாரி சர்பத் 50 மில்லி

**செய்முறை**

- அனைத்து பொருட்களையும் மிக்ஸி ஜாரில் சேர்த்து அரைத்து கொள்ளவும்.
- வடி காட்டாமல் ஒரு கண்ணாடி டம்ளர் ஊற்றி சிலென்று பரிமாறலாம்
- சுவையான நன்னாரி பிணக்கோலடா தயார்.

thiraimalar.com திரைமலர்

## பீரூட் சர்பத்

தேவையான பொருட்கள்

- ❖ பீட்ரூட் நறுக்கியத்தி 1 கப்
- ❖ பிளாக் சால்ட் (கருப்பு உப்பு) 1 சிட்டிகை
- ❖ லெமன் ஜூஸ் 1 நம்பர்
- ❖ நன்னாரி சர்பத் 50 மில்லி
- ❖ தண்ணீர் தேவையான அளவு



- ❖ புதினா நறுக்கியது 1 டீ ஸ்பூன்

**செய்முறை**

- அனைத்து பொருட்களையும் மிக்ஸி ஜாரில் சேர்த்து அரைத்து கொள்ளவும்.
- நன்றாக வடிகட்டி ஒரு கண்ணாடி டம்ளர் ஊற்றி சிலென்று பரிமாறலாம்
- சுவையான பீட்ரூட் சர்பத் தயார்.

## Coconut Melon Mist



thiraimalar.com திரைமலர்

தேவையான பொருட்கள்

- ❖ இளநீர் 1 நம்பர்
- ❖ வழுக்கை தேங்காய் 4 டேபிள் ஸ்பூன்
- ❖ வாட்டர் மெலன் நறுக்கியது 1 கப்
- ❖ நன்னாரி சர்பத் 50 மில்லி
- ❖ புதினா நறுக்கியது 1 டீ ஸ்பூன்
- ❖ சப்ஜா விதை ஊறவைத்து 1 டேபிள்

செய்முறை

- அனைத்து பொருட்களையும் மிக்ஸி ஜாரில் சேர்த்து அரைத்து கொள்ளவும்.
- வடிகட்டாமல் ஒரு கண்ணாடி டம்ளர் ஊற்றி சிலென்று அதன் மேல்ஊற வைத்த சப்ஜா விதை போட்டுபரிமாறலாம்




# கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன










# சொர்க்கமே என்றாலும் நம்மூரு போல வருமா?

ஜப்பானில் பணி செய்த ஒருவரின் சொந்த அனுபவம் இது...

என் வேலை நிமித்தமாக நான் ஜப்பானியர்களோடு பழகும் வாய்ப்பு கிட்டியது.

நான் அமெரிக்க clientகளோடு வேலை செய்து பழகியவன். ஆனால் ஜப்பானியர்களோடு வேலை செய்யத் தொடங்கியபோது முற்றிலும் வித்தியாசம்.

என்ன வித்தியாசம் என்பதைப் பற்றி ஒரு புத்தகமே போடலாம். அப்படி ஆட்டோமொபைல்ஸ் தொழிலில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்திய Toyota கம்பெனி பற்றி "The Toyota Way" என்ற புத்தகம் உண்டு.

thiraimalar.com திரைமலர்

முடிந்தால் படிக்கவும்.

சரி, அங்கே கிடைக்கும் எல்லா பொருட்களும் தரமானவை தானா என்று கேட்டால் நான் இல்லை என்று தான் சொல்வேன்.

அலுவல் நிமித்தமாக இரண்டு முறை Tokyo சென்று வந்தேன். பல விஷயங்களில் ஜப்பான் அடைந்த வளர்ச்சியைப் பார்த்து அசந்துபோனேன்.

முதலில் நான் பார்த்து மிரண்டு போனது public டாய்லெட்இன் சுத்தம். இந்தியாவில் அந்த மாதிரி கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. Asakusa-என்ற அம்மன் கோவிலின் வெளியில் இருந்த பப்ளிக் டாய்லெட்ற்கு சென்று அசந்து போனேன். இதில் ஆச்சர்யம் என்னவென்றால் இது ஒரு சுற்றுலா தலம்.

இது எப்படி சாத்தியம்?

அவர்கள் பள்ளியில் படிக்கும் போதே சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எல்லா மாணவர்களும் பள்ளியை, வகுப்பை, கழிவறையை சுத்தம் செய்கிறார்கள். நம் நாட்டில் அப்படி சுத்தம் செய்யவிட்டால் அவ்வளவுதான். அந்த பள்ளி பல அவமானங்களுக்கு உட்படும்.

ஆனால் ஜப்பானில் அப்படியில்லை. எவனாயினும் இதைச் செய்தே தீரவேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம். மாணவர்களோடு சேர்ந்து அந்த வகுப்பு ஆசிரியரும் செய்ய வேண்டும்.

இது ஒரு புறம்.

இன்னொன்று அடுத்தவர்களின் மீது கொண்ட அக்கறை. நான் ஹோட்டலில்

தங்கியிருக்கும் போது என்னை கூட்டிக்கொண்டு போக அந்த கம்பெனி சார்பில் ஒருவர் வந்து கூட்டிச்செல்வார். 9 மணிக்கு lobby-இல் மீட் செய்யவேண்டும் என்று முந்தய நாளே முடிவெடுப்போம்.

நான் ஜப்பானியர்களின் நேரம் காக்கும் தன்மை அறிந்திருந்ததால் எப்படியாவது 8:45க்கு சென்றால் என்னை கூட்டி செல்ல வந்தவர் 8:30 க்கே வந்திருப்பார்.

Train, bus என்று எதில் பயணம் செய்தாலும் யாரும் யாரையும் தொந்தரவு செய்யக்கூடாது என்று பேசக்கூட மாட்டார்கள். அவ்வளவு ஏன், காதில் earphone மாட்டியிருந்தால்கூட சத்தம் வெளியே அடுத்தவர்களுக்கு கேட்கா வண்ணம் volume வைப்பார்கள்.

இவையெல்லாம் நல்லவை.

Train locomotive டிரைவர்ஸ் நேரம் தவறினால் அவர்களைப்போட்டு bend நிமித்தி விடுவார்கள். அது எந்த அளவிற்கு என்றால் அந்த train கம்பெனி மக்களிடம் மன்னிப்பு கேட்கும் அளவிற்கு.

நம்ம ஊரில் train late ஆனால் அது, "சிக்னல் கிடைக்கல போல. தம்பி ஒரு சமோசா குடு," என்று சாப்பிட்டு விட்டு அசால்ட்டாக இருப்போம். ஆனால் ஜப்பானில் train late ஆனால் news-இல் வரும்.

இந்த நேரம் தவறாமை ஒரு சில நேரங்களில் loco டிரைவர்ஸ்இன் தற்கொலைக்கு காரணமாக இருக்கிறது.

அங்கே இருந்த அலுவல் நண்பர் ஒரு முறை பேருந்தில் செல்லும் போது நடுவில் ஒரு சிக்னலில் bus நின்றுள்ளது. அந்த நண்பரின் வீடு சிக்னலில் இருந்து ரொம்ப பக்கம். டிரைவரிடம் கதவை திறக்குமாரு கேட்டிருக்கிறார்.

அதற்கு அந்த டிரைவர் ஏதோ கொலைகுற்றம் செய்தது போல் இவரை நோட்டம் விட்டிருக்கிறார். கதவும் திறக்கவில்லை. Bus இன்னும் தூரமாகச் சென்று bus stop எங்கு உள்ளதோ அங்கே தான் கதவு திறக்க பட்டிருக்கிறது. நண்பர் கால்கடுக்க பின்னே நடந்து வந்துள்ளார். முன் நின்ற சிக்னலுக்கு அருகில் உள்ள அவர் வீட்டிற்கு.

ரூல்ஸ் னா ரூல்ஸ் தான்.

இப்படி நிறைய உண்டு.

எல்லா இடங்களிலும் நேரம் தவறாமை, ஒழுக்கம், அடுத்தவர் மீதுள்ள அக்கறை, கடமையை தவறாமல் செய்தல் போன்ற கோட்பாடுகள் கடைபிடிக்கப் படுவதால் ஜப்பானியர்களிடம் தரம் பற்றிய விழிப்புணர்வு சற்று அதிகமே உள்ளது.

ஆனால் எங்கு சென்றாலும் காசுக்கு ஏத்த தோசை தான். அங்கேயும் 100 yen 200 yen



கடைகள் உள்ளன. 100 yen இந்திய மதிப்பில் 70 80 ரூபாய் வரை இருக்கும். இதில் நான் பார்த்ததில் பெரும்பாலும் சீனா ஐட்டம்கள் உள்ளன. லோ குவாலிட்டி products-உம் உண்டு.

2016இல் அங்கே இருந்து மனைவிக்கு ஒரு தோடு வாங்கினேன். விலை 800 yen. அது தான் cheapest விலை. இந்திய மதிப்பில் 450 ரூபாய். கோவை கிராஸ் கட் ரோடு காவ்யா ஸ்டோர்ஸ் இல் வாங்கினால் 40 ரூபாய்.

என்னதான் தரம் நன்றாக இருந்தாலும் கடைசியில் இது வெறும் covering தான்.

இதே போல் எந்த ஹோட்டலுக்கு சென்றாலும் minimum 800 yen ஆகும். நன்றாக சாப்பிட்டால் 1250 yen. நம்ம ஊரு மதிப்பில் 700 ரூபாய். Taxi கட்டணம் மிகமிக அதிகம். ஏறி உட்கார்ந்தால் 750 yen தான் தொடக்கமே. அதாவது 350 ரூபாய்.

நான் முதல் முறை சென்றபோது tokyo ஹோட்டலில் இருந்து Narita airport-இற்கு taxi ஏற்பாடு செய்திருந்தார்கள். கூட யாரும் வரவில்லை.

Airport-இல் இறக்கிவிட்டுவிட்டு டிரைவர் பில்இல் கையெழுத்து போட சொன்னார். பில் 22,000 yen சொச்சம். எனக்கு ஒரு வினாடி பக் என்றானது. என்னுடைய ஆறுநாள் அலுவலக allowanceஏ 22,000 தான்.

Should I pay you cash or card? என்றேன். No, the company has already paid என்றான். அப்பாடா, ஆள விட்றா என்று escape.

கொஞ்சம் பார்த்து சுதாரித்து செலவு செய்தால் பிழைக்கலாம். என்னதான் சொர்க்கமா இருந்தாலும் நம்ம ஊர் போல வராது.

# சுரண்டல் முதலாளியும் கழுதை ஊழியர்களும்?

ஒரு ஊரில் வியாபாரி ஒருவன் தனது ஊரிலிருந்து தினமும் சரக்கு மூட்டைகளைக் கொண்டு சென்று பக்கத்து ஊர் சந்தையில் விற்பது அவனது தொழில். இதற்காக மாட்டுவண்டி ஒன்றை அவன் வைத்து இருந்தான்.


ஒரு நாள் அவன் வண்டியில் பூட்டும் மாடு அவனிடம் வந்து, "எஜமான்! இரண்டு ஆண்டுகளாக நான் உங்களிடம் வேலை செய்கிறேன். ஆனால் நான் செய்யும் வேலைக்கு நீங்கள் எனக்கு சாப்பிட கொடுக்கும் புற்களின் அளவோ மிகக் குறைவு. தயவு செய்து எனக்கு நீங்கள் கொடுக்கும் புல்லின் அளவை அதிகரியுங்கள்" என்றது.

மாடு சொன்ன தைக் கவனமாக கேட்ட வியாபாரி, "மாடே! நீ கடினமாக உழைப்பதுஉண்மை யே. ஆனால் பக்கத்து வீட்டுக்காரன் மாடு 25 மூட்டைகளை தன் வண்டியில் சுமக்கிறது. ஆனால் நீயோ தினமும் 20 மூட்டைகளை மட்டுமே சுமக்கிறாய். நீ அதிக மூட்டைகளைச் சுமந்தால் உனக்கு புல்லின் அளவை அதிகரிப்பதைப் பற்றி யோசிக்கிறேன்" என்றான்.

பக்கத்து வீட்டு மாடு பஞ்சு மூட்டைகளை மட்டுமே சுமக்கிறது என்பதை அறியாமல் இந்த மாடும் அதிக மூட்டைகளைச் சுமக்க ஒப்புக் கொண்டது.

இப்படியே ஓராண்டு சென்றது. மாடு மீண்டும் சென்று வியாபாரியிடம் புல்லின் அளவை அதிகரிக்க கேட்டது.

அதற்கு வியாபாரி, "மாடே! அதிக பாரம் ஏற்றியதால் நம்முடைய பழைய வண்டி பாதிப் படைந்து விட்டது. எனவே நான் இப்போது புது வண்டி செய்ய சொல்லியுள்ளேன். அதற்கு ஆகும் செலவை வேறு நான் பார்க்க வேண்டும். இன்னும் சற்று நாள் பொறுத்துக் கொள். நான் புல்லின் அளவை



நிச்சயம் அதிகரிக்கிறேன்'' என்றான். வேறு வழியின்றி மாடும் ஒத்துக் கொண்டது.

புது வண்டி வந்த ஆறு மாதங்களுக்கு பின் மாடு மீண்டும் வியாபாரியிடம் சென்று வழக்கமான கோரிக்கையை வைத்தது. இப்போது வியாபாரி, "மாடே! இப்போதெல்லாம் உன்னுடைய வேகம் மிகக் குறைந்து விட்டது. பக்கத்துக்கு ஊருக்கு செல்ல முன்பை விட அதிக நேரம் எடுத்துக் கொள்கிறாய். இதனால் நான் வியாபாரம் செய்யக் கூடிய நேரம் குறைந்து விட்டது. எனவே உனக்கு அதிக புல் தருவது இப்போதைக்கு சாத்தியமில்லை'' என்றான்.

கோபமடைந்த மாடு, "எஜமான்! இந்தப் புது வண்டியின் பாரம் பழைய வண்டியை விட மிக அதிகம். இந்த கனத்தையும் சேர்த்து இழுக்க வேண்டியதாலேயே என்னால் முன்பு போல விரைவாக செல்ல முடியவில்லை'' என்றது.

அதற்கு வியாபாரி, "மாடே! நீ என்ன காரணம் சொன்னாலும் உன்னால் எனக்கு அதிக லாபத்தை பெற்றுத் தர முடியவில்லை. நான் உன் மேல் ஏற்றும் மூட்டைகளின் எண்ணிக்கையை வேண்டுமானால் குறைத்து விடுகிறேன்.

ஆனால் நீ அதிக புல் கேட்காதே'' என்றான். தன் இத்தனை ஆண்டு உழைப்பும் வீணாகி விடும் என்று பயந்த மாடு, "வேண்டாம் எஜமான். நான் எப்படியாவது வேகமாக சென்று உங்களுக்கு அதிக லாபம் பெற்றுத் தந்து விடுகிறேன்'' என்று கூறியது.

மறுநாள் முதல் மாடு தன் சக்தியெல்லாம் திரட்டி வேகமாக ஓட ஆரம்பித்தது. மீண்டும் முன்பு எடுத்து கொண்ட அதே நேரத்திலேயே பக்கத்துக்கு ஊருக்கு சென்று வியாபாரியை சேர்க்கத் தொடங்கியது. ஆனால் மிகக் கடின உழைப்பால் ஒரே மாதத்திலேயே நோயுற்று படுத்த படுக்கையானது.

வழக்கமாக சாப்பிடும் புல்லைக் கூட அதனால் சாப்பிட முடியவில்லை. சில நாட்கள் கழித்து வியாபாரி, "மாடே! உன்னை நல்ல விலைக்கு ஒருவர் கேட்கிறார். அவரிடம் உன்னை விற்று விடப் போகிறேன்'' என்றான்.

"எஜமான்! நான் இப்போது இருக்கும் நிலைமையில் என்னால் எந்த வேலையும் செய்ய முடியாது. என்னை ஏன் அவர்கள் விலைக்கு கேட்கிறார்கள்?'' என்றது.

வியாபாரி அதற்கு "அவர்கள் உன்னை வேலை செய்யச் சொல்ல வாங்கவில்லை. உன்னைக் கொன்று உன் தோலை எடுக்கவே உன்னை விலைக்குக் கேட்கிறார்கள்'' என்றான்.

வியாபாரி சொன்ன பதிலைக் கேட்டதும் மாட்டிற்கு கண்களில் நீர் வர தொடங்கியது.

"எஜமான்! நீங்கள் செய்வது அநியாயம். உங்கள் பேச்சை நம்பி மாடாய் உழைத்தாலேயே நான் நோயுற்றேன். இல்லாவிடில் நான் நீண்ட காலம் ஆரோக்கியமாக இருந்திருப்பேன். நீங்கள் செய்தது துரோகம்'' என்றது.

அதைக் கேட்ட வியாபாரி, "நான் செய்தது துரோகம் இல்லை. ஒரு எஜமானனின் லட்சியம் தன் தொழிலாளியிடம் முடிந்த அளவு அதிக வேலை வாங்கி லாபம் பெறுவது. நான் அதையே செய்தேன். உன்னால் ஐந்து ஆண்டுகளில் சம்பாதிக்க வேண்டிய பணத்தையும் மூன்றே ஆண்டுகளில் சம்பாதித்து விட்டேன். இப்போது உன்னை விற்பதன் மூலமும் பணம் சம்பாதிக்க போகிறேன். என்னுடைய அதிக லாபம் பெறும் நோக்கம் நிறைவேற உன்னுடைய ஆசையை மூலதனமாக்கி கொண்டேன். நீ முதல் முறையிலேயே சுதாரித்து கொண்டிருந்தால் தப்பித்து விட்டு இருக்கலாம்'' என்றான்.

மாடு தன் முட்டாள் தனத்தை எண்ணி நொந்து கொண்டது.

_நீதி: நிர்வாகத்தின் நோக்கம் ஊழியர்களிடம் இருந்து எவ்வளவு வேலை வாங்க முடியுமோ அவ்வளவு வேலை வாங்குவது. பணியாளர்கள் தான் விழிப்புடன் இருக்க வேண்டும்.

## அலுவலகங்களில் பெருகும்
# கூழை கும்பிடு

உயர்ந்த ஜாதியினரையும், வெள்ளைக்காரனையும் பார்த்தால் கூழை கும்பிடு போட்டு அவர்களிடம் கூனி குருகி போகும் பழக்க வழக்கம் ஒருகட்டத்தில் ஒழிக்கப்பட்டது என்று கூறி மார்தட்டிக்கொண்டாலும்.

அந்த நடைமுறை தற்போது நவீனத்துவம் அடைந்துள்ளது. முதலாளி, உயர்பதவியில் இருப்பவர்கள், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள் வாயிலாக அப்பழமையான பழக்க வழக்கம் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

அரசியல்வாதிகளைப் பார்த்தாலும், அரசு அதிகாரிகளைப் பார்த்தாலும் கூனி குருகினால் அவர்களிடம் நடக்கவேண்டிய வேலை எளிதாகும்.

அலுவலகங்களில் உயர் பதவியில் இருப்பவர்களுக்கு ஜால்ரா, கூனி குருகிப்போனால் சம்பள உயர்வு, பணி நிரந்தரம், பதவி உயர்வு போன்றவை எளிதாக கிடைக்கும் என்பதால் படித்தமக்களும் பாமரனைவிட கேவலமாக தங்களை உயர் பதவியிலிருப்பவருக்கு அடிமையாக்கிக் போகின்றனர்.

மனித அடிமைத்தனம் என்பதை எக்காலத்திலும் அழிக்க முடியாது, அது பரிணாமவளர்ச்சி அடைந்து மனிதர்களிடையே வாழும் என்பதை கூனிகுருகி ஜால்ரா அடிக்கும் மக்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

# தந்தை பொறுப்பு சுகமான சுமை

கணவனாக இருப்பது சுலபம்.

சரிமா, சாரிமானு சொல்லிட்டு மாசத்துக்கு ரெண்டு சாரி எடுத்துக் கொடுத்து பொறுப்புள்ள கணவனா காலம் தள்ளிடலாம்.

ஆனால்

ஒரு தந்தையாக இருப்பது தான் கடினம்.

தம் உதிரத்தில் உதிக்கும் அந்த உயிரின் ஒரு துடிப்பு கூட இதய துடிப்பை எகிற வைத்து விடும் தந்தைக்கு.

அதுவும் பெண் குழந்தை என்றால் தாயை விட இமையில் வைத்து பாதுகாப்பான் தந்தை என்பவன்.

மகளுக்கு..

ஒரு வழிகாட்டியாய்.. சுக துக்கங்களில் இருந்து பாதுகாக்கும் பாது காவலனாய் இருக்க வேண்டும் என்று நினைப்பவன்தான் தந்தை.

தன் மகளின் கண்களில் இருந்து கண்ணீரே சிந்தக் கூடாது என்று அவன் இறக்கும் வரை பேராசை கொள்பவன் தான் தந்தை.

தான் ஈட்டும் பொருள் அத்தனையும் தன் மகளுக்கு கொடுப்பதற்கு தயங்காதவன் தகப்பன். பலர் கடன் பட்டு திருமணத்தை நடத்திவிட்டு கஷ்டபடுறவங்கள பார்த் திருக்கேன்.

மகளின் பிறப்பில் இருந்து அவன் இறக்கும் வரை பல அவதாரங் களை எடுக்க வேண்டி இருக்கு.

கல்லூரிக்கு அனுப்புறதல இருந்து, இன்னொரு கையில புடிச்சி கொடுத்த பிறகும், ரிடையர்டு ஆவாத பொறுப்பு தான் அப்பன் என்ற பொறுப்பு.

ராமன் வேடமிடும் அரக்கர்களின் தவறான காதல் வலையில் சிக்கினால் ஒரு நண்பனாக இருந்து புரிய வைத்து அதில் இருந்து மீட்கும் மீட்பராக இருக்க வேண்டும்.

மகளை நினைத்து வயிற்றில் மட்டுமே நெருப் பை கட்டி கொண்டிருப்பாள் தாய் ஆனால் பொண்ணுக்கு பொன் சேர்க்கனும்னு இந்த பிரதேசத்தில் எத்தனை தந்தைமார்கள் கொதிக்கும் வெயிலில் உடல் எல்லாம் தனலாக extra overtime பாக்கறாங்க தெரியுமா?

தன் மகள் இளவரசியாக இருக்க வேண்டும் என்று காலத்துக்கும் சேவகம் பார்ப்பவன் தான் தகப்பன்.

"அப்பாக்களின் ராஜ்ஜியத்தில் மகள் என்றும் இளவரசி தான்"

உலகில் இருக்கும் சுமைகளில் அற்புதமான சுமை தந்தை பொறுப்பில் இருப்பதுதான். வெளியில் இந்த சுமை தெரியாது மனதில் சுமப்பவருக்கே சுமை கூட சந்தோஷமாக இருக்கும்.



# இதுவரை வெளிவந்த இதழ்களை




thiraimalar.com திரைமலர்

**www.thiraimalar.com**

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

## இணையதளங்களில் இலவசமாக படிக்கலாம்

வாரம்தோறும் வாட்சப்பில்
இதழ் பெற விரும்புபவர்கள்
hi என்று கீழ்காணும் எண்ணிற்கு
மெசேஜ் அனுப்பவும் வாட்சப் குருப் லிங்க்
அனுப்பிவைக்கப்படும்

# 9444264610


**Owned, Published by N.Geetharani. Design by SMLGraphics, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : N.Geetharani, Cell: 9444264610.**
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com